(8) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1971.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு 1971ஆம் ஆண்டு கட்டடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1971) பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

(7) அரசினர் சட்ட முன்வடிவங்கள்—தொடர்ச்சி.

(எ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1971)

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, "தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்த சட்ட முன் வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 24/1971) பேரவையின் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இது பற்றி ஒரு சிறு விளக்கம் தர விரும்புகிறேன். பேரவைத் தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவு மூன்று மாதத்திற்கு முன்பு கொண்டு வரப்பட்டு ஒரு நீடிப்பைப் பெற்றது. இப்போது ஒரு ஆண்டுகாலமாக நீடிக்கவேண்டும் என்ற கோரிக்கையை பேரவை யின் முன் வைக்கிறேன். இதைக் கொண்டு வருவதற்குக் காரணம் அப்போது உள்துறைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஒரு குழு நிறுவப்பட்டு அது பல நல்ல காரியங்களைச் செய்து ஒரு அறிக்கையை இவ்வரசுக்கு அனுப்பியிருக்கிறது. அது பலரிடம் கேட்டறிந்த யோசனைகளை இவ்வரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறது. அவற்றை அரசு பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது. அவற்றில் பல சிக்கல்கள் இருப்பதால் அவற்றையெல்லாம் பரிசீலித்து சட்ட பூர்வமாக ஆக்குவதற்குக் காலம் தேவைப்படுவதால் இதை ஒரு ஆண்டுகாலம் நீடிக்கவேண்டும் என்று கோரப்படுகிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. இதில் வேறு பிரச்சனைகள் எதுவும் இல்லை. எனவே இதைப் பேரவையின் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் வேண்டுகின்றேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த மசோதாவைக் கொண்டு வந்தது சரியில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். காரணம் சென்ற தொடரில் இது வரும்போது எப்படியும் இந்த பட்ஜெட்

---

* ......19—7—1971-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

தொடரில் ஒரு "காம்ப்ரஹென்சிவ்" பில் கொண்டு வரப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இப்போது இதை இன்னும் ஒரு ஆண்டுகாலத்திற்கு நீடிக்க வேண்டும் என்று கோருகின்றார்கள். நமக்கு அறிக்கை ஜனவரி 71-லேயே கிடைத்தது. அமைச்சரவர்களே கூறுகின்றார்கள் உள்துறை செயலாளர் அவர்கள் தலைமையில் இயங்கிய குழு நல்லதொரு அறிக்கையைக் கொடுத்திருக்கிறது என்று. பிறகு உடனடியாக இவற்றைப் பரிசீலித்து அனைத்தையும் உள்ளடக்கிய சட்டத்தைக் கொண்டு வந்திருக்கலாம். இப்போது ஒரு ஆண்டுக்கு நீடிக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். நான் கொடுத்த திருத்தம் ஒரு ஆண்டுக்கு என்று இருப்பதை மூன்று ஆண்டுகள் என்று ஆக்கவேண்டும் என்று சொன்னது உண்மையிலேயே "ப்ரொடெஸ்ட்" செய்வதற்காகத்தானே தவிர வேறில்லை. அதை நான் ப்ரஸ் செய்யவில்லை. செப்டம்பர் 30-க்குள் இந்த மசோதா கொண்டு வரப்பட்டு சட்டமாக்கப்பட வேண்டும் என்பதே என் விருப்பம். கண்ட்ரோல் ஆர்டர் மூலம் பொது மக்கள் பலருக்கு பல நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. இது நீடிக்கப்படவேண்டியதுதான். இப்போது நீடிக்கப்படாவிடில் பல நன்மைகளை மக்கள் இழக்கநேரும் என்பதால் இதை ஆதரிக்கிறேன். ஆனால் செப்டம்பர் 30-க்குள் ஒரு காம்ப்ரெஹென்சிவ் பில் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஸார், இந்த ஆயுள் நீடிப்பிற்கு என்று திருத்தம் கொண்டுவருவது சரியானதல்ல. காரணம் இப்படி காலாகாலத்தில் செய்யவேண்டியதைச் செய்யாமல் இருந்துவிட்டு பிறகு கெடு முடியும் நேரத்தில் இப்படி திருத்தங்களைக்கொண்டு வந்து ஆயுளை நீடிக்க வழி செய்து கொடுத்தால் பிறகு இலாக்காக்கள் சுறுசுறுப்பாக இயங்காமல் போய்விடும். எனவே ஆயுள் நீடிப்பதற்கு என்று திருத்தம் கொண்டு வராமல்—இப்போது நடப்பது நடக்கட்டும்—ஆனால் இனியாவது 1972-க்கு முன்னதாக ஒரு காம்ப்ரெஹென்ஸிவ் பில்லைக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, குடியிருப்போர்களை வெளியேற்றுவது நியாயம் இல்லை. இப்போது இது நிறைவேற்றப்படாவிடில் பலரும் பல சிரமங்களுக்குள்ளாவார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூன்று ஆண்டு காலத்திற்கு நீடித்துத்தரவேண்டும் என்று ஒரு திருத்தத்தினைக் கொடுத்திருக்கின்றார்கள். வர இருக்கும் ஒரு ஆண்டு காலத்திற்குள் இதை சட்டமாக்க வேண்டும் என்று தான் இப்போது கால கெடு கேட்டிருக்கிறோம். இதை நிறைவேற்றிவிட்டால் எவ்வளவு பேர் பாதிக்கப்பட்டுவிடுவார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். கால வரம்பு கேட்பதற்கான காரணம், இதிலே சில சட்ட சிக்கல்கள் இருக்கின்றன. குடியிருப்போரைப்பற்றியும் பார்க்க வேண்டியிருக்கிறது. வீடு கட்டியவரையும் பார்க்க வேண்டியிருக்கிறது. எந்தக் காலத்தில் கட்டினார்கள் என்பதையும் பார்த்து வாடகைத் தொகை நிர்ணயிக்க வேண்டியதாக இருக்கிறது. ஆக இதுபோல பல சிக்கல்கள் இருக்கிற காரணத்

[திரு. க. இராசாராம்] [1971 ஜூலை 29

தினுல் இவற்றை எல்லாம் நன்கு ஆராய்ந்து சிறந்த முறையில் முடிவு எடுப்பதற்கு காலம் தேவைப்படுகிற காரணத்தினுல் தான் இப்போது இந்த மசோதாவை மேலும் ஓராண்டுக்கு நீட்டித்தர வேண்டும் என்கிற கோரிக்கையோடு கொண்டுவந்திருக்கிறோம். இதை மூன்ருண்டு நீட்டிக்கவேண்டும் என்பதாக திரு. தங்கமணி அவர்கள் திருத்தம் கொடுத்திருக்கிருர்கள். அப்படிக் கொடுத்ததற்கான காரணத்தையும் சொன்ஞர்கள். நிச்சயமாக சீக்கிரமே விரிவான மசோதா கொண்டுவரப்படும் ஆதலால் அவர் தம்முடைய திருத்தத்தை திரும்பப்பெறவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி "தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை–வாடகைக்கட்டுப்பாடு) இரண்டாம் திருத்த சட்ட முன் வடிவு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

Clause 2

THIRU K. T. K. THANGAMANI: I am not moving my amendment.

Clause 2 was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே "தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை–வாடகைக் கட்டுப் பாடு) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று மீண்டும் நாளைக் காலை 9 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

(10) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. Statutory Rules and Orders.

185. Notification issued with G.O. Ms. No. 1221, Revenue, dated the 24th April 1971, in regard to certain amendments to the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Rules,